தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 15, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, மார்ச் 29, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை'

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவர்களது பண்புகளுக்கு ஏற்பப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும்கூட தவறு உண்டாகிவிடும்.

1. வினாக்கள்- விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 121, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

121—

சத்தியமங்கலம் தொகுதியில் பட்டா வழங்குதல்

24432—திருமதி அ.தி. சரஸ்வதி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி, குன்னூரில் மலைச் சரிவு உள்ளதால் பட்டா வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ள போதிலும் நிலப்பரப்பு சமனாக உள்ள சத்தியமங்கலம் தொகுதியில் கடம்பூர், தாளவாடி ஆகிய இடங்களில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீலகிரி மாவட்டம் உள்ளிட்டு மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும், மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படாமல் தடுத்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதும், தற்போது மிகவும் அவசியம் என்று கருதி அனைத்து மலைப்பிரதேசங்களிலும் விவசாயத்திற்கு நிலம் ஒப்படைத்துவருவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது..

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, குன்னூர் மலைச் சரிவுப் பகுதியில் பட்டா வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. சத்தியமங்கலம் பகுதி தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதி சரிவுப் பகுதி அல்ல. இது சமவெளிப்பகுதியாகும். இங்கு வசிக்கும் மக்கள் 25 ஆண்டுகாலமாக பி.மெமோ போட்டுக் கொண்டுதான் மானாவாரி விவசாயம் செய்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியில் எந்தவித அடிப்படை வசதியையும், லோன் வசதியையும், அரசு சலுகைகளையும் பெறமுடியவில்லை. அப்படிப்பட்ட ஏழை மக்களின் நலனில் அக்கறை கொண்டு அமைச்சரவர்கள்—அந்தப் பகுதியில் ஆதிதிராவிடர்கள், பழங்குடி இனத்தவர்கள் மட்டும் 10,000-க்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள்; 80 சதவீத மக்கள் வறுமைக்கோட்டிற்கும் கீழ் வாழ்கிறார்கள்; நிலமற்ற விவசாய மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் பட்டா வழங்கி, அவர்களின் வாழ்க்கை ஒளிபெற, ஏழைகளின் இல்லங்களில் ஒளிவிளக்காகத் திகழும் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்று வாரி வாரி வழங்கும் வள்ளல் குணம் கொண்ட மலைகளின் அரசியாம், மனிதருள் மாணிக்கமாம், எங்கள் இதய தெய்வம் அன்னை அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏழைகளுக்கு, அவர்கள் வாழ்வு மலர பட்டா வழங்க அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பிரதேசங்களில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு, மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. மலைப் பிரதேசங்களில் ஏராளமான ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டால் அதிக அளவு மரங்கள் வெட்டப்படுவதால், மண் அரிப்பு, நிலச் சரிவு ஏற்பட்டு, நீர்நிலை வறட்சி ஏற்படுகிறது. தாளவாடி மற்றும் கடம்பூர் பகுதிகள் சமமாக இருந்தபோதிலும் மலைப்பிரதேசம் என்ற அடிப்படையில் தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. தாளவாடி, கடம்பூர் பகுதிகளில் விவசாயிகளுக்குக் கொடுப்பதைத் தடுத்தாலும், வீட்டுமனைப் பட்டா கொடுக்க ஆவனசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதியைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சமவெளிப் பகுதி என்று கூறியுள்ளேன். அங்கு சமவெளிப் பகுதியாக இருக்கின்றது. எல்லா விவசாயிகளும், பட்டா பூமியில் இருக்கின்ற எல்லா விவசாயிகளும், பெரும்பாலும் நெல், ராகி, கரும்பு எல்லாவற்றையும் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தைக் கொடுப்பதனால் நமக்கு ஒன்றும் பாதகம் ஏற்படப் போவதில்லை. அமைச்சரவர்கள் அதை மறுபரிசீலனை செய்து, நிலமற்ற ஏழைகளுக்கு நிலப்பட்டா வழங்கவும், வனக் கட்டுப்பாட்டிலுள்ள செட்டில்மென்ட் இடங்களில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கவும் அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டும். அது இந்தப் பகுதி மக்களின் கிட்டத்தட்ட 25 ஆண்டுக்கால கோரிக்கையாகும். இதில் அமைச்சரவர்கள் சிறிது கருணை காட்டி—தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதியிலும் மற்ற சட்டமன்றத் தொகுதியிலுள்ள மலைப் பகுதிகளிலும் இந்தப் பிரச்சனை இருக்கிறது. ஆகையால் இதை அமைச்சரவர்கள் கருணைகூர்ந்து—ஏழைகளின் இதயத்தில் ஒளிவிளக்கு ஏற்றவேண்டுமாய்க் கேட்டு, அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மக்களிடத்திலேயும் ஒரே மாதிரியாகத்தான் இந்த அரசு கருணை காட்டுகிறது. கருணை காட்டுவதினாலேயே பொதுவாக ஏற்படுகிற நன்மைகள் பாதிக்கப்படக் கூடாது. சமுதாயத்திற்குப் பாதகம் வராத கருணையை எப்பொழுதும் இந்த அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாகக் காட்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதிலே கருணை காட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான், அந்த ஆக்கிரமிப்பு பற்றி சமுதாயத்திற்குப் பாதகம் விளைவிக்கிறதா இல்லையா என்பதை ஆராய்வதற்காக நில நிர்வாக ஆணையர் தலைமையில், முதன்மை அலுவலர், தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்க்கிறபோது, இந்த ஆக்கிரமிப்பினால் சமுதாயத்திற்குக் கேடு விளையாது என்று சிபாரிசு செய்வதற்கு மட்டும், நிலப் பட்டாக்களும், வீட்டு மனைப் பட்டாக்களும் கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே ஆதிதிராவிட மக்கள் இருந்தாலும், அதையும் கவனமாக கவனித்து எந்த அளவுக்கு கருணை காட்ட முடியுமோ அந்த அளவுக்குக் கருணை காட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. வெங்கடராம ரெட்டி.

திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயும் ஆயிரக்கணக்கான, மலைவாசி மக்கள் நூற்றாண்டு காலமாக வம்சபாரம்பரியமாக பட்டா இல்லாமல் புறம்போக்கை நம்பித்தான் இருக்கிறார்கள். 1986-ல் பட்டா வழங்குவதற்குத் தடை உத்திரவு போட்டிருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன் வருமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நூறு ஆண்டுக்காலமாக இருப்பவர்களை அரசு கவனிக்கும். ஆனால் 100 ஆண்டுக்காலமாக அப்படியே இருந்திருக்கிறார்கள். அவர்களை உடனடியாக வெளியே அனுப்பாமல் அதற்கு என்னசெய்ய முடியுமோ அதைப் பார்த்து அரசு நல்லதாகச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டிபோன்ற மலைப் பிரதேசங்களில், ஆக்கிரமிப்புதாரர்களுக்குப் பட்டா வழங்கினால் மரங்கள் வெட்டப்பட்டு, மண் அரிப்பு போன்ற நிலை ஏற்பட்டு, அதனால் அந்தப்பகுதி பாதிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், தாளவாடிப் பகுதி சம வெளிப்பகுதியாகும். கடம்பூர் பகுதியும் சமவெளிப் பகுதியாகும். அதேபோன்று, அந்தியூர் தொகுதியிலே பர்கூர் மலையிலே ஏறக்குறைய 32 சிறிய கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் நிறைய பேர்கள் புறம்போக்கு நிலங்களை நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். கிணறுகளும் தோண்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்கள் நலனில் அக்கறை கொண்டு தாங்கள், தயவு செய்து நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆதரவற்ற ஏழைகளுக்கும் அநாதை சிறார்களுக்கும், முதியோர்களுக்கும், வறியோர்களுக்கும் வாரி வாரி வழங்கும் இந்த நல்ல தருணத்தில், அருள் கூர்ந்து இதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி அவர்களை நியமனம் செய்தது போன்று, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரையும் நியமனம் செய்து, அந்தப்பகுதியையும் நேரில் பார்வையிட்டு, பட்டா வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி, கடம்பூர் என்பது பெரியார் மாவட்டத்திலே உள்ளதுதான். ஆனால் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் குழுவிலே இல்லை. இருந்தாலும், அவர்கள் பார்க்கிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் சமவெளியான பகுதியிலே இருக்கிறபோது, அதற்கு வீட்டு மனைப் பட்டா கொடுப்பதிலே எந்தத் தடையும் இல்லை. ஆனால் அதிலே விவசாய நிலப்பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, அந்த அதிகாரிகள் அதை

ஆராய்ந்து—மிகவும் தயவு தாட்சண்யம், கருணை எல்லாம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் அதை பொது நோக்கோடு பார்த்து—இருப்பவர்கள் யாராக இருந்தாலும் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்க்காமல், பொது நலனுக்குப் பாதிப்பு ஏற்படாத அளவுக்கு நன்மை செய்வதற்கு இந்த அரசு எப்போதும் முன்னுக்கு வரும். உடனடியாக எல்லா இடங்களிலும் வேகமாக ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டிருக்கும்போது அந்தப் பகுதியில் வேகமாக ஆக்கிரமிப்புகளை அகற்றாததிலிருந்தே அதை அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது என்பது பொருளாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆக்கிரமிப்பு ஏற்பட்டால்தான் மரங்களை வெட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் விவசாயம் செய்யக்கூடியவர்கள் கிட்டதட்ட 60, 70 வருடங்களாக அந்த நிலத்திலே தேயிலை பயிர் செய்து மரங்களை வளர்த்து, மரங்கள் எல்லாம் நல்ல உயரமாக வளர்ந்து மண் அரிப்பைத் தடுக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது. அந்த மாதிரி நிலங்களை ஆராய்ந்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதேபோல வீட்டுமனைப் பட்டா இல்லாத காரணத்தால் அரசாங்கம் வழங்கக்கூடிய இலவச வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதுபோன்ற பகுதிகளில் வீட்டுமனைப் பட்டாக்கள் நீலகிரி மாவட்டத்தில் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று பேரவைத் தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி நீலகிரி என்ற பகுதிகள் எல்லாம் நல்ல கோடைவாசஸ்தலம் என்பது போய் இன்றைக்கு அங்கு முனிசிபாலிட்டியிலே நிறைய வீடுகள் எல்லாம் வந்துவிட்டன. அரசு அதை கவனித்துக் கொண்டிருக்கிறது. ஊட்டி, குன்னூர் போன்றவைகளை எல்லாம் முதலில் உள்ளது மாதிரி கொண்டுவருவது மிகக் கடினம்தான். இருந்தாலும் இருப்பதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று இந்த அரசு நினைக்கிறது. அதே போல ஏழை, எளியவர்களுடைய தேவைகளையும் பார்த்து தக்கவாறு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி, குன்னூரில் மலைச்சரிவு உள்ளதாலும், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும் பட்டா வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது என்று நமது

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். நமது அரசானது பட்டா வழங்கப்படுவதை நிறுத்துவதற்கு முன்பாக, பல ஏழை மக்களுக்கு பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பட்டாக்களினால் அவர்கள் வீடு கட்ட முடியாமல் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்குக் கண்டிப்பாக வீடு கட்ட அனுமதி வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், மேலும் புதிய சட்டத் திருத்தத்தின்கீழ் பல கடுமையான விதிகள் இருப்பதனால் பல ஏழை, நடுத்ததர மக்கள் வீடு கட்டாமல் தவித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையிலே, அரசு உடனடியாக கைட்லைன்ஸை அறிவித்து அவர்கள் வீடு கட்ட அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பெருமனதுடன் அவற்றை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, திரு.எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உணவு அமைச்சர்.

122—

ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரத்தில் நியாயவிலைக் கடை அமைத்தல்.

***20642**— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரம் கிராமத்தில் நியாய விலைக்கடை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் மரியதாய்புரம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க சாத்தியம் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடை என்பது, எங்கள் ஊரில் மரியதாய்புரம் கிராமத்திலிருந்து 21/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பரங்குன்றாபுரத்தில் சென்று ரேஷன் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அது மட்டுமல்ல; இதுமாதிரி பல ஊர்களில்—நெல்லைதிருத்து, கண்ணாடிகுளம், அருணாசலபேரி, ஆலடிபட்டி, துறையூர் போன்ற கிராமங்களில் எல்லாம்—நலிந்த பிரிவினர்கள் எல்லாம் ஒரு ஊரிலிருந்து ஒரு ஊருக்குச் செல்லும்போது, ரேஷன் வாங்கும்போது சில பிரச்சினைகள் வருகின்றன. பொதுமக்கள் போகமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான அரிசி போன்றவற்றை அந்தக் கடைகளில்